DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , FAST TRACK COURT, AMBATTUR
TIRUVALLUR DISTRICT

STC.No.177/2024
Deposition of Witness for – Prosecution :PW1
Defence :

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கிருஷ்ணகுமாரி | ஜாதி | : | |
| க/பெ | : | ஜெயகுமார் | மதம் | : | |
| கிராமம் | : | அம்பத்தூர் | தொழில் | : | இல்லத்தரசி |
| வட்டம் | : | சென்னை | வயது | : | 54/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of Date

---

**தேதி -19.09.2025**

**குறுக்கு விசாரணை: PW1**

1. நான் B.Sc பட்டதாரி ஆவேன். வீட்டிலிருந்து Aari work blouse செய்யும் வேலை பார்த்து வருகிறேன். அதில் மாத வருமானம் தோராயமாக ரூ.30,000/- வரும். K.அன்பரசனுக்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எதிரி எனது கணவர் மூலம் அறிமுகமானார். எனது பக்கத்து ஊர் காரர் ஆவார். விழுப்புரம் நீதிமன்றத்தில் எதிரி மீது ஒரு வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் எனது தந்தைக்கு எதிரி பணம் தரவேண்டும் அவர் இறந்துவிட்டதால் வாரிசு என்ற அடிப்படையில் நானும்என் சகோதரியும் உமாமகேஸ்வரியும் விழுப்புரம் நீதிமன்றத்தில் எதிரி மற்றும் கண்ணன் மீதும் வழக்கு தாக்கல் செய்திருந்தோம். எனது கணவர் மூலம் தந்தையுடன் அறிமுகமாகி எதிரியின் குடும்ப தேவைக்காக அப்பாவிடம் 2017 ஆம் ஆண்டு ரூ.6,50,000/- பணம் வாங்கியிருந்தார். எனக்கு நேரடியாக எதிரியை தெரியாது என்றால் சரிதான். எந்த இடத்தில் வைத்து எதிரியிடம் வழக்கு காசோலை வாங்கினேன் என்றால் விழுப்புரம் சமரச மையத்தில் தீர்வு காணப்பட்டது அங்கு வைத்து இவ்வழக்கின் காசோலை எதிரி கொடுத்தார்.

2. வழக்கறிஞர் அறிவிப்பில் பு.சா.ஆ.6 எந்த தேதியில் காசோலை வங்கியில்

செலுத்தினோம் என்ற விவரத்தை கூறவில்லை என்றால் சரியல்ல. 12.06.2024 ல் இவ்வழக்கின் காசோலை வங்கியில் செலுத்தினேன். மேற்படி காசோலை திருப்பப்பட்ட காரணம் Exceeds arragement என்றால் சரிதான். என் தந்தைக்கு எதிரி மற்றும் கண்ணன் இருவரும் சேர்ந்து தான் ரூ.6,50,000/- தரவேண்டிய பாக்கி உள்ளது என்றால் சரதான். இவ்வழக்கில் காசோலை தொகை எவ்வாறு எதிரி மீது நிர்ணயிக்கப்பட்டது என்றால் லோக் அதாலத்தில் நீதிபதி முன்பாக வழக்கறிஞர்களும் நாங்களும் சமரச பேச்சுவார்த்தை நடத்தி தான் இவ்வழக்கில் உள்ள காசோலை தொகையை நிர்ணயம் செய்தோம். கண்ணன் மற்றும் அன்பரசன் இருவரும் பேச்சுவார்த்தை நடத்தி அதில் அன்பரசன் காசோலை தருவதாக முடிவு செய்து காசோலை கொடுத்தார். மேற்படி அன்பரசன் மற்றும் கண்ணன் இடையே பேசிக்கொண்டு தான் இவ்வழக்கின் காசோலை கொடுத்தார் என்று ஆதாரம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இவ்வழக்கின் காசோலை தான் ஆதாரம் ஆகும்.

3. கடன் தொகைக்கு இரு நபர்களும் பொறுப்பாளியாக இருக்கும் நிலையில் ஒரு நபரிடம் மட்டுமே கடனுக்கான காசோலை வாங்கியதால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அன்பரசன் தான் காசோலை கொடுத்தார். நானும் என் சகோதரியும் மட்டும் தான் என் தந்தைக்கு வாரிசுதாரர் ஆவோம். உரிமையியல் வழக்கு எதிரி மட்டும் கண்ணன் மீது நானும் என் சகோதரியும் சேர்ந்து வழக்கு தாக்கல் செய்திருந்தோம், ஆனால் இந்த காசோலை வழக்கு நான் மட்டுமே தாக்கல் செய்திருப்பதால் எனது சகோதரியிடமிருந்து நான் மட்டுமே புகார்தாரராக நடத்த அனுமதி ஏதேனும் பெற்றேனா என்றால் சகோதரியின் ஒப்புதல் பெற்று தான் இவ்வழக்கு தாக்கல் செய்தேன். நான் தாக்கல் செய்த புகார் மனு, வழக்கறிஞர் அறிவிப்பு, பிரமாண வாக்குமூலத்தில் எனது சகோதரியிடம் அனுமதி பெற்று தான் இவ்வழக்கு தாக்கல் செய்தேன் என்ற விவரம் கூறவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் 3 காசோலையில் யார் எழுதினார் என்றால் எதிரி அன்பரசன் தான் லோக் அதாலத்தில் வைத்து பூர்த்தி செய்து கொடுத்தார். நான் தாக்கல் செய்த புகார் மனு, வழக்கறிஞர் அறிவிப்பு, பிரமாண வாக்குமூலத்தில் பின்தேதியிட்ட காசோலை தான் எதிரி கொடுத்தார் என்ற விவரத்தை கூறவில்லை என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கின் 3 காசோலையும் ஒரே தேதியில் தான் வங்கியில் செலுத்தினேன். 12.06.2024 ஆம் தேதி 3 காசோலையும் வங்கியில் செலுத்தப்படும் விவரத்தை

எதிரியிடம் தெரிவித்தேனா என்றால் தெரிவித்தேன். இந்த வழக்கை தாக்கல் செய்த போது வழக்கின் தொகைக்கு எனது தந்தைக்கும் தான் முகாந்திரம் உள்ளது என்றும் எனக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல, விழுப்புரம் லோக் அதாலத்தில் நடந்த விவரத்தை தெரிவித்தேன். இவ்வழக்கை தனியாக நடத்த முகாந்திரம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கின் முக்கிய சாரம்சம் எதுவும் தெரிவிக்காமல் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Digitally signed by
Tmt.K.Mahasakthi.B.B.A.,L.L.B.,(Hons)